# நாடு தழுவிய ஒரு நாள் வேலை நிறுத்தம்

## 27-11-2014

## தீ பரவட்டும்....

அருமைத் தோழர்களே!

BSNL நிர்வாகம் ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை தீர்க்காமல் இழுத்தடித்து வருகிறது. நமது போராட்டக்குழு சார்பாக 27-06-2014 அன்று 30 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி நிர்வாகத்தோடு விவாதம் நடைபெற்றது. BSNL நிர்வாகம் இந்த 30 அம்ச கோரிக்கைகளையும் எழுத்துப்பூர்வமாக (minutes) வெளியிட்டது.

எழுத்துப்பூர்வமாக்க ஒப்புக்கொண்ட நிர்வாகம் பிரச்சனைகளைத் தீர்க்காமல் கிணற்றில் விழுந்த கல் போல் அமைதி காத்தது. நிர்வாகத்தின் இந்த அலட்சியப் போக்கை கண்டித்து 30-09-2014 அன்று 2 மணி நேர வெளிநடப்பு போராட்டத்தை வெற்றிகரமாக நடத்திட JAC அறைகூவல் விட்டது. வெளிநடப்புப் போராட்டமும் நாடு முழுவதும் எழுச்சியுடன் நடைபெற்றது. ஆனாலும் நிர்வாகம் தூக்கத்திலிருந்து எழவில்லை. தூங்குவது போல் நடிக்கின்றது நிர்வாகம் என்பதனை ஊழியர்கள் புரிந்துகொண்டுள்ளனர். என்ன பாஷையில் பேசினால் நிர்வாகத்திற்கு புரியுமோ, அந்த பாஷையில் பேச JAC மிகச் சரியான முடிவை எடுத்தது.

ஆம் தோழர்களே! நவம்பர் 27 அன்று ஒரு நாள் வேலைநிறுத்தம் என்பது JACயின் அறைகூவல். 30 அம்ச கோரிக்கைகளை வென்றிட, அசையா நிர்வாகத்தை அசைத்திட இந்த வேலை நிறுத்தம் அவசர அவசியமாகும். நமது வேலை நிறுத்தத்தால் கொத்தளங்கள் நடுங்கட்டும்! தீ பரவட்டும். வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்குவோம்!

## கோரிக்கைகள்

- RM. Gr.D, தொழிற்சாலை தொழிலாளர்கள் உள்ளிட்ட கேடர்களின் ஊதிய தேக்க நிலைக்கு (STAGNATION) தீர்வு காண வேண்டும்.
- 01-01-2007க்கு முன்னும் பின்னும் பணியமர்த்தப்பட்ட ஊழியர்களுக்கு இடையே ஏற்பட்டுள்ள ஊதிய சமநிலையற்ற தன்மை (WAGE DISPARITY) நீக்கப்பட வேண்டும்.
- புதிய PLI ஃபார்முலா உருவாக்கப்பட்டு PLI வழங்க வேண்டும்.
- NEPP அமலாக்கத்தில் நிர்வாகம் ஏற்படுத்தியுள்ள தடைகளுக்கு தீர்வு காண வேண்டும்.
- பரிவு அடிப்படையிலான பணி நியமனத்தில் உருவாகியுள்ள தடைகளை நீக்க வேண்டும்.
- LTC விடுப்பை காசாக்குதல் மற்றும் மருத்துவ படிகளை திரும்ப வழங்க வேண்டும்.
- E1 ஊதிய விகிதத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டும்.
- மேலும் கால தாமதமின்றி ஊழியர்களின் கேடர் பெயர் மாற்றங்களை செய்ய வேண்டும்.
- OFFICIATING JTOக்களுக்கு REGULAR பதவி உயர்வு வழங்க வேண்டும்.
- நேரடி நியமன ஊழியர்களுக்கு 30% ஓய்வு கால பயன்களை அமல்படுத்த வேண்டும்.
- DOP&T உத்தரவின்படி இலாகா தேர்வுகளில் SC/ST ஊழியர்களின் தகுதி மதிப்பெண்களை தளர்த்த வேண்டும்.

- கடைசியாக நடைபெற்ற JTO/JAO தேர்வு முடிவுகளை கூடுதல் மதிப்பெண் வழங்கி மறு பரிசீலனை செய்ய வேண்டும்.
- ஊழியர்களின் பதவிகளுக்கு புதியதாக ஆள் எடுப்பு நடத்த வேண்டும்.
- விடுபட்ட தற்காலிக அந்தஸ்து / காசுவல் ஊழியர்களை நிரந்தரப்படுத்த வேண்டும்.
- ஒப்பந்த ஊழியர்களுக்கு சமூக பாதுகாப்புகளான ESI, EPF உள்ளிட்டவைகள் அமலாக்கப்படு வதனை உத்தரவாதப்படுத்த வேண்டும்.
- MANAGEMENT TRAINEE தேர்விற்கு ஊழியர்களையும் அனுமதிக்க வேண்டும்.
- டெலிகாம் மெக்கானிக் பயிற்சி பெற்ற அனைவரையும் PERSONAL UPGRADATION முறையில் பதவி உயர்த்த வேண்டும்.
- IDA ஊதிய விகிதத்தின் அடிப்படையில் தற்காலிக அந்தஸ்து மஸ்தூர்கள் / காசுவல் ஊழியர்களின் ஊதியம் நிர்ணயம் செய்ய வேண்டும்.
- SC/ST BACKLOG காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும்.
- பதவி உயர்வு குழுவிற்கு ஏற்கெனவே பரிந்துரைக்கப்பட்ட SR.TOA, டெலிகாம் மெக்கானிக், ஓட்டுநர் உள்ளிட்ட கேடர்களின் ஊதிய விகிதங்களை மாற்ற வேண்டும். பதவி உயர்வு குழுவை புனரமைக்க வேண்டும்.
- DOT காலத்தில் பயிற்சிக்கு சென்று BSNL-ல் பணி நியமனம் பெற்றவர்களுக்கு ஜனாதிபத்திய உத்தரவு வழங்க வேண்டும்.
- 01-01-2007க்கு பின்னர் வருகின்ற அடுத்த ஆண்டு ஊதிய உயர்வு தேதியில் பதவி உயர்வில் ஊதியம் நிர்ணயித்துக் கொள்ளும் விருப்பம் தெரிவிக்க ஊழியர்களுக்கு அனுமதி வழங்க வேண்டும்.
- 01-01-2007 முதல் 09-06-2013 வரை பணி ஓய்வு பெற்றவர்களுக்கு 78.2% பஞ்சப்படி இணைப்பின் அடிப்படையில் ஓய்வூதியம் மாற்றியமைக்கப்பட வேண்டும்.
- முதல் ஊதிய மாற்றத்தின் அடிப்படையில் ஏற்பட்ட அனாமலிகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும்.
- டெலிகாம் ஃபேக்டரிகளை புத்தாக்கம் செய்ய வேண்டும்.
- TM, RAJBASHA ADHIKARI, TTA, JAO மற்றும் JTO தேர்வுகள் எழுதுவதற்கான தகுதி கட்டுப்பாடுகளை தளர்த்த வேண்டும்.
- 78.2% பஞ்சப்படி இணைப்பின் காரணமாக தர வேண்டிய நிலுவை தொகைகளை ஊழியர்களுக்கு உடனடியாக பட்டுவாடா செய்ய வேண்டும்.
- அதிகாரிகளின் CUG மற்றும் பிற NETWORKகளுடன் பேசும் வசதியுடன் கூடிய 200/- ரூபாய் மதிப்புள்ள சிம்கார்டுகள் ஊழியர்கள் அனைவருக்கும் வழங்க வேண்டும்.
- அலவன்ஸ்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.
- கால் சென்டர்களை BSNL ஊழியர்களை கொண்டே செயல்படுத்திட வேண்டும். அதனை அவுட்சோர்சிங் செய்வதை நிறுத்த வேண்டும்.

*அனைவரும் கலந்து கொண்டு வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்கிட வேண்டுகிறோம்*

**Joint Action Committee of the Non-Executives in BSNL**

**BSNLEU - NFTE (BSNL) - TEPU - SNATTA**

**தமிழ் மாநிலம்**